மறுப்பேன். அதுதான் நடைமுறையில் இருக்கிறது. இப்போது நீங்கள் பேச நினைக்கிற விவகாரத்தை, கேள்வி நேரம் முடிந்ததற்குப் பின்னர், நீங்கள் கேட்டால், அப்போது அதைப் பார்க்கலாம். இப்போது கேள்வி நேரத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்பது முறையல்ல; மரபு அல்ல. அதை விதிப்படி செய்யவே முடியாது. ஆகவே, கேள்வி–பதில்தான் முதலில் எடுத்துக்கொள்ளப்படும்.

2. வினாக்கள்—விடைகள்—*தொடர்ச்சி*

உடுக்குறியிட்ட வினாக்கள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

86—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***57412—திரு. பா. நீதிபதி**:

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், நடுமுதலைக்குளம் கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், நடுமுதலைக்குளம் கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.

முற்பகல் 10–05

திரு. பா. நீதிபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் காலங்களிலே மனித புனிதராக, மனித தெய்வமாக வாழ்ந்து, இன்றைக்கு இயற்கை எய்தியபோதிலும், தமிழகத்திலுள்ள அனைவருடைய உள்ளங்களிலும், இல்லங்களிலும் தமிழ்த் தாயாக, கருணைத் தாயாக வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் ஆன்மாவின் வழிகாட்டுதலின் பேரிலே தமிழக மக்களுடைய நலன் காக்கக்கூடிய வகையிலும், தமிழக மக்களுடைய வாழ்வு வளம் பெறக்கூடிய வகையிலும் மாண்புமிகு அம்மாவின் ஆட்சியை இன்றைக்கு தமிழகத்தில் வழிநடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழகத்தினுடைய துணை முதலமைச்சர் அவர்களையும் பணிவுடன் நான் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியத்தில் நடுமுதலைக்குளம் கிராமம் ஏறத்தாழ 5,000 மக்கள்தொகைக் கொண்ட ஓர் ஊராட்சியாகும். நடுமுதலைக்குளம் நடுநிலைப் பள்ளியிலே தற்பொழுது 133 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். அந்தப் பள்ளியில் படித்த மாணவர்கள் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு படிக்க வேண்டுமானால் 7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள விக்கிரமங்கலம் பள்ளிக்குச் செல்ல வேண்டும். இல்லையெனில் செக்கானூரணி பள்ளிக்குச் செல்ல வேண்டும். இந்த இரு பள்ளிகளுமே நடுமுதலைக்குளம் கிராமத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளன. இவ்வளவு தூரம் சென்று பயில்வதற்கு மாணவ, மாணவிகளுக்கு சிரமமாகவும், இடையூறாகவும் இருக்கின்ற காரணத்தினால், அந்த மாணவ, மாணவிகளுடைய நலன் கருதி தயவுகூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடுமுதலைக்குளத்திலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

2020 மார்ச் 13]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது விக்கிரமூலம் உயர்நிலைப் பள்ளி 7 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். 5 கிலோ மீட்டருக்கு அதிகமான தொலைவில் இருக்கும் பள்ளிகளைத் தரம் உயர்த்துவது அரசின் விதிமுறைகளில் இருக்கிறது. ஆனால், அந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில் 8 ஆம் வகுப்பில் 12 மாணவர்கள்தான் பயில்கின்றார்கள். 50 மாணவர்கள் இருந்தால் மட்டும்தான் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. மாணவர் சேர்க்கையைப் பொறுத்தவரையில் வருகின்ற ஆண்டுகளில் கூடுதலாக மாணவர்களைச் சேர்க்கின்றபொழுது, அரசு அதுகுறித்து பரிசீலிக்கும். பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு 3 ஏக்கர் நிலம் வேண்டும். ஆனால் 2 ஏக்கர் 75 சென்ட் நிலம்தான் அங்கே இருக்கின்றது. இதையெல்லாம் மனதில் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கூறியவற்றை நிவர்த்தி செய்து தருவார்களானால் அதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.*

திரு. பா. நீதிபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுமுதலைக்குளம் பள்ளியில் 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை 49 மாணவ, மாணவிகள் படித்துக்கொண்டிருக்கின்றார்கள். அதேபோல 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை 89 மாணவ, மாணவிகள் படித்துக்கொண்டிருக்கின்றார்கள். பள்ளிக்குச் சொந்தமாக 2 ஏக்கர் 75 சென்ட் நிலம் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோன்று 3 ஏக்கர் நிலம் தேவைப்படுமானால் உறுதியாக நாங்கள் அதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கின்றோம். ஆகவே, தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

உசிலம்பட்டி நகராட்சியிலே ஓர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியை புதிதாகத் துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும். ஏற்கெனவே உசிலம்பட்டி நகராட்சியில் ஓர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. 1984–1985 ஆம் ஆண்டு அந்த அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலே நான் +1, +2 படித்தபோது மாணவ, மாணவிகள் என இருபாலரும் அப்

பள்ளியில் சேர்க்கப்பட்டு படித்தோம். ஆனால், 1985–க்குப் பிறகு அங்கு மாணவிகள் சேர்க்கப்படவில்லை. கடந்த 35 ஆண்டுகளாக அந்தப் பள்ளி அரசு ஆண்கள் பள்ளியாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. பா. நீதிபதி: *ஆகவே, உசிலம்பட்டி பகுதியிலே உசிலம்பட்டி நகரத்தில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக உசிலம்பட்டியில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைப்பது என்பது சாத்தியமாக இருக்காது. ஏனென்று சொன்னால், அங்கே நடுநிலைப் பள்ளி இருக்குமேயானால், அந்தப் பள்ளியை பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கான வாய்ப்பு முதல் கட்டமாக இருக்கும். இரண்டாவது கட்டமாகத்தான் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த முடியும். ஆகவே அங்கே அருகில் ஏதாவது நடுநிலைப் பள்ளி இருக்குமேயானால், அதை பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு அரசு பரிசீலிக்கும். எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு, அந்தப் பகுதியிலிருக்கின்ற மக்களின் நலன் கருதி, தொலைதூரத்திலிருக்கின்ற மக்களின் நலன் கருதி, பின்தங்கிய பகுதியிலிருக்கின்ற மக்களின் நலன் கருதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

2020 மார்ச் 13]

முற்பகல் 10—10

திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதியிலுள்ள தச்சம்பட்டு நடுநிலைப் பள்ளி மற்றும் அனந்தபுரம் பெண்கள் நடுநிலைப் பள்ளி ஆகியவற்றை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தித் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு உரிய தொகையும் அளிக்கப்பட்டுவிட்டது; போதுமான இடமும் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பள்ளிகளைத் தரமுயர்த்தித் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தச்சம்பட்டு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தர வேண்டும் என்று கூறினார்கள். அரசினுடைய விதிமுறைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்குமேயானால், அப்பள்ளியிலே 50 மாணவர்கள் பயில்வார்களேயானால், 3 ஏக்கர் நிலம் இருக்குமேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

87—

பாதாள சாக்கடைத் திட்டம்

***5677—திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—